தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 029/ந/2023
நாள் 17.02.2023

திருமதி.K.வினோதா,
அரக்கோணம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
அரக்கோணம் நகராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம். – எதிர் மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம், சுவால்பேட்டை, தர்மராயரெட்டி தெரு, கதவு எண்.53/30 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.K.வினோதா என்பவரின் நாளிடப்படாத புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2023 அன்று பெறப்பட்டு 029/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

அரக்கோணம், சுவால்பேட்டை, தர்மராயரெட்டி தெரு, கதவு எண்.53/30 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.K.வினோதா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது நாளிடப்படாத புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“எனது கணவர் திரு.கே.கேசவன், அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வந்தார். அவர் 30.04.2021 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார். எனது கணவர் CPS செட்டில்மெண்ட்டிற்காக அலுவலகத்தை தவறாமல் பின்தொடர்ந்தார். ஆனால் முனிசிபல் அலுவலகத்தில் இருந்து எந்த பதிலும் இல்லை. மேலும் அவர் செப்டம்பர் 2021–ல் மூளை பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு வழக்கமான மருந்துகளை உட்கொண்டார். ஆனால் கடுமையான நோய் காரணமாக 24.04.2022 அன்று காலமானார். ஆஸ்பத்திரியில் நிறையப் பணம் செலவழித்து, கடனுக்காகப் பணத்தை வாங்கிக் கொண்டு, வட்டியையும், அசல் தொகையையும் கட்ட முடியாமல் தவித்தோம்.

எனது மகனின் சம்பளத்தில்தான் பிழைத்து வருகிறேன், கடந்த வாரம் வரை நகராட்சி கமிஷனரை நகராட்சி அலுவலகத்தில் நாங்கள் பின்தொடர்ந்து வருகிறோம், ஆனால் எந்த பதிலும் இல்லை, எங்கள் கேள்விகளைக் கேட்க யாரும் கவலைப்படவில்லை. ஒரு சுகாதார மேற்பார்வையாளராக, எனது கணவர் கோவிட் 19 காலத்தில் தனது முழு ஆதரவையும் வழங்கி பொது மக்களுக்கு சேவை செய்துள்ளார். ஆனால் ஒரு சுகாதாரப் பணியாளர் என்ற முறையில் அவர் இன்றுவரை தீர்வுக்குத் தகுதியானவர் அல்ல. கடைசி நம்பிக்கையாக, தங்களுக்கு இந்த மனுவினை சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் அரக்கோணம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

அரக்கோணம் நகராட்சி ஆணையர் மனுதாரரின் புகார் மனு குறித்தான தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

(3) மனுதாரரும் மற்றும் அரக்கோணம் நகராட்சி ஆணையரும் 14.02.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.02.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி. K. வினோதா, 14.02.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"எனது கணவர் திரு. கே. கேசவன் என்பவர் அரக்கோணம் நகராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராகப் பணியாற்றி 30.4.2021 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில், கடந்த 24.04.2022 அன்று உடல் நலக்குறைவின் காரணமாக காலமானார். அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றபோது அவருக்கு சேரவேண்டிய பங்களிப்பு ஓய்வூதியத் தொகை (CPS) எங்களுக்கு வந்து சேரவில்லை. இதனால் நாங்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளோம். எனவே, அரக்கோணம் நகராட்சியிலிருந்து எனது கணவர் திரு. கே. கேசவன் என்பவருக்கு சேரவேண்டிய தொகையான சுமார் 7/– இலட்சம் ரூபாயை அரக்கோணம் நகராட்சி வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான அரக்கோணம் நகராட்சி ஆணையாளர் 14.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரரின் கணவர் திரு. கே. கேசவன் என்பவர் அரக்கோணம் நகராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராகப் பணியாற்றி 30.4.2021 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில், அவருக்கு சேரவேண்டிய Contributory Pension Scheme தொகையான சுமார் 7/– இலட்சம் ரூபாய் அரக்கோணம் நகராட்சியால் வழங்கப்பட வேண்டும். அரக்கோணம் நகராட்சியில் தற்போதைய நிதிநிலை நெருக்கடி காரணமாக மனுதாரரின் கணவருக்கு மேற்கண்ட தொகை வழங்கப்படவில்லை. அரக்கோணம் நகராட்சியில் தற்போது வரிவசூலை துரிதப்படுத்தி மனுதாரருக்கு சேரவேண்டிய மேற்கண்ட தொகை இன்னும் இரண்டு மாத காலத்திற்குள்

(14.04.2023–க்குள்) வழங்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், அரக்கோணம் நகராட்சி ஆணையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தைச் சார்ந்த மனுதாரர் திருமதி.K.வினோதா என்பவர் தனது மனுவில் அரக்கோணம் நகராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக 30.04.2021 அன்று ஓய்வு பெற்று, உடல்நலக் குறைவின் காரணமாக 24.04.2022 அன்று காலமான தனது கணவர் திரு.K.கேசவன் என்பவருக்கு சேரவேண்டிய பங்களிப்பு ஓய்வூதியத் தொகை (CPS) இந்நாள்வரை அரக்கோணம் நகராட்சியால் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை என புகாராக தெரிவித்துள்ளார்.

மேற்காணும் புகார் மனு குறித்து எதிர்மனுதாரரான அரக்கோணம் நகராட்சி ஆணையரிடம் நேரடி விசாரணை மேற்கொண்டதில், துப்புரவு மேற்பார்வையாளராக பணி புரிந்து ஓய்வு பெற்றபின், 24.04.2022 அன்று காலமான மனுதாரரின் கணவர் திரு.K.கேசவன் என்பவருக்கு வழங்கப்படவேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகை ரூ 7/– இலட்சம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளதும், அரக்கோணம் நகராட்சியில் ஏற்பட்டுள்ள நிதிநிலை நெருக்கடி காரணமாக உடனடியாக வழங்க முடியவில்லை எனவும், தற்போது நகராட்சியில் வரி வசூலிக்கும் நடவடிக்கையினை துரிதப்படுத்தி வரித்தொகைகள் வசூலிக்கப்பட்டு வருவதால் காலமான துப்புரவு மேற்பார்வையாளர் திரு.K.கேசவன் என்பவருக்கு சேரவேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகையான (CPS) ரூ 7/– இலட்சம் முழுமையாக இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் அதாவது 14.04.2023 தேதிக்குள் ஒப்பளிப்பு செய்து வழங்கப்படும் என்று நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரக்கோணம் நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலத்தில் அறுதியிட்டுள்ளபடி காலமான, மனுதாரரின் கணவர் திரு.K.கேசவன் என்பவருக்கு சேரவேண்டிய பங்களிப்பு ஓய்வூதியத் தொகை முழுவதும் 24.04.2023 தேதிக்குள் ஒப்பளிப்பு செய்து, அதன் அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு உடன் அனுப்பிவைக்குமாறு அரக்கோணம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரரின் புகார் மனு மீதான தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்காமல் இருந்த அரக்கோணம் நகராட்சி ஆணையரின் செயலினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.வினோதா,
53/30, தாமராயரெட்டி தெரு, சுவால்பேட்டை,
அரக்கோணம் – 631 001, இராணிப்பேட்டை மாவட்டம்.

2) ஆணையாளர், அரக்கோணம் நகராட்சி,
அரக்கோணம் – 631 001, இராணிப்பேட்டை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032